[25th March 1963

Erskine Hospital (Madurai)

* 354 Q.—SRI V. SANKARAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state whether there is any proposal to establish a steam-laundry in Government Erskine General Hospital at Madurai?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: No.

Electric motors.

* 355 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Public Health be pleased to state whether it is a fact that the Government have permitted the installation of motors up to 3 horse-power in residential areas for domestic and other purposes?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: Electrical appliances intended to be used for purely domestic or personal purposes or comfort need no permission. Electric motors for drawing water from wells in lodging houses, restaurants and hotels are treated as those intended for personal purposes and comfort.

Installations of electric motors up to 3 horse-power have been made permissible in notified residential areas for running cottage industries notified by Government under section 92 of the Madras Public Health Act, 1939.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: மூன்று ஹார்ஸ் பவருக்கு மேல் 10 ஹார்ஸ் பவர் வரை ரெசிடென்ஷியல் ஏரியாக்களில் மோட்டார் வைக்க அனுமதிக்கப்படுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: சார், "பர்சனல் பர்ப்பசுக்காக" மூன்று ஹார்ஸ் பவர் வைத்துக் கொள்ளலாம் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. மூன்று ஹார்ஸ் பவர் வைக்க அரசாங்கத்தினுடைய உத்தரவு தனியாகத் தேவை இல்லை. அந்த முறையில் 10 ஹார்ஸ் பவர் வைக்க முடியாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். முருகையன்: குடியிருப்புப் பகுதிகளில் இருக்கின்ற வீடுகளை குடியிருப்பு அல்லாத பிராந்தியங்களாக மாற்றி விடுகிறார்கள். அப்போதும் தொடர்ந்து மூன்று பக்கமும் வீடுகள் இருக்கக்கூடிய நிலைமை இருக்கின்றன. அவ்வாறு குடியிருப்புப் பகுதிகளை குடியிருப்பு அல்லாத பிராந்தியமாக மாற்றுவதைத் தடுக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: குடியிருப்பு வீடுகளில் மூன்று ஹார்ஸ் பவர் வரை வைத்துக்கொள்ள பர்மிஷன் கொடுத்து இருக்கிறோம். குடியிருக்கும் பகுதிகளில் இருப்பவர்களுக்கு ஆட்சேபணை எதுவும் இல்லையென்று சொன்னால் அங்கு 10 ஹார்ஸ் பவர் வைக்க அனுமதி கொடுக்கப்படுகிறது. ஆனால் கண்டிப்பாக உத்தரவு போடும்போது, குடியிருக்கும் இடங்களில் 10 ஹார்ஸ் பவர் வைக்கக் கூடாது என்பது அரசாங்கத்தின் உத்தரவு.

திரு. எஸ். முருகையன்: குடியிருப்பு பிராந்தியத்தில் இருந்து குடியிருப்பு அல்லாத பிராந்தியமாக மாற்றும்போது மாற்றிய பிறகுதான் இருக்கக்கூடிய தொந்தரவுகள் தெரியுமே தவிர அதற்கு முன்பு

25th March 1963]

பொதுமக்களுக்கு அக்கஷ்டம் தெரிவதில்லை. அதற்கு சம்மதம் கொடுத்து விடுகிறார்கள். அப்படி மாற்றிய பிறகு அங்கு தொழிற்சாலை ஆரம்பித்த வுடன் மீண்டும் இடைஞ்சல் இருக்கிறதென்று மனு செய்கிறார்கள். ஆகவே குடியிருப்பு அல்லாத பிராந்தியமாக மாற்றும்போது தீர ஆலோசித்து மாறுதல் செய்யப்படுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : தீர ஆலோசனை செய்துதான் செய்கிறார்கள்.

கனம் சபாநாயகர் : தீர ஆலோசித்தாலும்கூட திருப்பியும் வரு வார்கள்.

போலீசாருக்கு வீடுகள்

* 358 கேள்வி.—**திரு. இராம. அரங்கண்ணல் :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

சென்னை நகர பஸ் ஸ்டாண்டு சமீபமுள்ள இடத்தில் போலீசாருக்கு வீடு கட்டப்படுவதற்காகச் செய்யப்பட்ட ஏற்பாடுகள் எந்த நிலையில் உள்ளன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கட்டிட வேலை முடிந்து, பூச்சு வேலையும் தளவரிசை வேலையும் நடந்து வருகின்றன. 1963 ஏப்ரல் மாதத்திற்குள் வேலை பூர்த்தியடையலாம்.

The building work is completed and the work relating to plastering and flooring, etc., is in progress. The work is expected to be completed by about April 1963.

திரு. இராம. அரங்கண்ணல் : சட்டக் கல்லூரியின் எதிரில் இருந்த போலீஸ் ஸ்டேஷன் இடிக்கப்பட்டு அங்கு 30 லட்சம் ரூபாய் செலவில் 5 மாடி கதர் எம்போரியம் வைக்கப்படுவது உண்மையா ? அங்கு கட்டப் பட இருந்த போலீஸ் க்வார்ட்டேர்ஸ்க்காக பக்கத்தில் பஸ் ஸ்டாண்ட் அருகி லிருந்த 50 குடிசைகள் அகற்றப்பட்டு அங்கு இப்போது போலீஸ் வீடுகள் கட்டப்படுவது உண்மையா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கதர் எம்போரியம் கட்டப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பது உண்மைதான். ஆனால் அதை உத்தேசித்து குடிசை போட்டிருப்பவர்களை வெளியேற்றுகிறார்கள் என்று சொல்வது சரி அல்ல. குடிசை வாழ்வோர் இடங்கள் சுகாதாரமாக இருக்கவேண்டும், சீரிய வகையில் இடம் அளிக்கவேண்டும். மாற்ற வேண்டிய அவசியம் இருந்தால் மாற்ற வேண்டும். எந்தெந்த இடங்களில் எந்தெந்த கட்டடங் கள் கட்டவேண்டுமோ அதை எல்லாம் பரிசீலனை செய்து கட்டப்படுகிறது. ஏற்கனவே அங்கு குடியிருப்பு வசதியில்லை. இப்போது குடியிருப்பு வசதி செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது.

புலவர் கா. கோவிந்தன் : ப்ராட்வே பஸ் ஸ்டாண்ட் மிகவும் நெருக்கடி யாக இருக்கிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அதை அடுத்தி ருக்கிற இடங்களில் விஸ்தரிப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கவனித்து நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

* 359 கேள்வி.—**திரு. கு. கோபால கவுண்டர் :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) செஞ்சி தாலூகா, சத்தியமங்கலம் கிராமத்தில் போலீஸ்காரர் களுக்கு வீடு கட்டும் திட்டம் எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?

(இ) காலதாமதமாவதற்கு காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) சத்தியமங்கலம் கிராமத்தில் போலீஸ்காரர்களுக்கு வீடு கட்டும் திட்டம் தேசிய நெருக்கடி காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.